O.S.No. 07/2015 நாள் : 12.01.2023

PW1 குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பில்)

எனது அப்பா, அம்மாவிற்கு எனது தம்பி மட்டும் ஒரு ஆண் குழந்தை 7 பெண் குழந்தைகள் ஆவார்கள். பெண் பிள்ளைகளை எனது பெற்றோர் நன்றாக படிக்க வைத்து நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு ரைஸ்மில் மற்றும் விவசாய தொழில் இருந்து வந்தது. வா.சா.ஆ.5 ஆவணமான தினசரி நாளிதழ் விளம்பரத்தை நான் எதற்காக கொடுத்தேன் என்றால் எனது தம்பி தாவா சொத்தை விற்கப்போகிறேன் என்றும், அதற்கு ஆட்சேபணை இருந்தால் தெரிவிக்கலாம் என்றும் தினமலர் நாளிதழில் விளம்பரம் செய்திருந்தார். அதற்கு மறுப்பு அறிவிப்பு தினத்தந்தி நாளிதழில் நான் கொடுத்தேன். எனது தம்பி தினமலர் நாளிதழில் கொடுத்த பொது அறிவிப்பு என்னிடம் காட்டப்படுவதுதான். அது பி.வா.சா.ஆ.1 ஆகும். மேற்படி நான் கொடுத்த வா.சா.ஆ.5 அறிவிப்பிற்கு எனது வழக்கறிஞருக்கு நாங்கள் தான் விவரம் சொன்னோம். எனது தம்பி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். தாவா சொத்தை 2ம் பிரதிவாதியிடம் எனது தம்பி விற்பனை செய்து விட்டார் என்றால் சரிதான். அதன்பின்னர் வா.சா.ஆ.6 அறிவிப்பை எனது தம்பிக்கு கொடுத்தேன் என்றால் சரிதான். அதற்கு எனது தம்பி வா.சா.ஆ.9 பதிலறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் எனது தம்பி வழக்கறிஞருக்கு கொடுத்த வா.சா.ஆ.10 மறு அறிவிப்பை நான் கொடுக்கவில்லை என்று எனது தம்பி எதிர்வழக்குரையில் மறுப்பு கூறியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.10 அறிவிப்பை அனுப்பியதற்கு எந்த நிரூபண ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 மறுஅறிவிப்பை நான் கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக மேற்படி ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி வழக்கு சொத்தை கார் நிறுத்தி கார் ஷெட் போட்டு அனுபவித்து வருகிறார். மேற்படி சொத்திற்கு வடக்கு புறத்தில் 2ம் பிரதிவாதி வீடு இருந்தது, அதில் அவர் தற்போது 2 மாதங்களாக குடியிருக்கவில்லை, அதில் பள்ளிக்கூடம் நடந்து வருகிறது. எனது தம்பி மீது நான்மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன், மற்ற சகோதரிகள் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மற்ற சகோதர்கள் ஞானசேகரன் மகள் திருமணத்திற்காக தற்போது ஒன்று சேர்ந்துள்ளார்கள். 1ம் பிரதிவாதிக்கு தாவா

சொத்தை எனது தாயார் கொடுத்தது எங்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு தெரிந்து இஷ்டப்பட்டுத்தான் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு எனது தம்பி மீது ஏற்பட்ட மனஸ்தாபத்தின் காரணமாகத்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது தம்பிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், அதை அவர் இஷ்டம்போல் யாருக்கு வேண்டுமானாலும் விற்பனை செய்வதற்கு உரிமை உள்ளது என்றும், அதில் நான் பாகம் கேட்பதற்கோ, உரிமை கொண்டாடுவதற்கோ 1ம் பிரதிவாதி எழுதிகொடுத்த கிரைய ஆவணத்தை நீக்கரவு செய்வதற்கோ எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. எனது அம்மா இறந்தது முதல் எனது தம்பி தாவா சொத்தை அவரது சொத்தாக அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. அந்த சொத்தில் எனது அப்பாவும் இருந்து வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்து எனது தம்பி சொத்து என்பதால்தான் அதில் பாகம் எனது தாயார் இறந்தது முதல் கேட்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**(7ம் பிரதிவாதி மேற்படி குறுக்கு விசாரணையை தனது தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்கிறார்)**